**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 110/2019**
**நாள் 06/03/2024, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வெங்கடேஷ் என்கிற வெங்கடேசன் | த/பெயர் - கேசவரெட்டி |
| வயது - 53 | தொழில் - |
| விலாசம் - லிங்கபையன் பேட்டை கிராமம், பெரும்பேடு அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

வழக்கு சொத்து குறித்து 15 ஆண்டுகளில் எவ்வித பிச்சணையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் காலத்தில் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது தந்தை 1996-ல் இறந்தார். வழக்கு சொத்தின் 4 எல்லை விவரத்தில் உள்ளவாறு இல்லாமல் பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் மாறியுள்ளது என்றால் சரி தான். குறுக்காக தெரியும் அதனால் எல்லை மாறுபடும். வழக்கறிஞர் ஆணையர் அளந்த விவரம் எனக்கு தெரியும் அதன் அறிக்கையை எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார். சர்வே எண்.894/2-ல் வடக்கு பக்கம் சிறிய வீடு இருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் புதிய வீடு ராமமூர்த்தி கட்டியுள்ளார் என்றால் சரிதான். நான் எத்தனை சென்ட்டிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் 5 சென்ட் அளவில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதற்கு அருகில் யார் நிலம் உள்ளது என்றால் வடக்கு பக்கம் நாகராஜ் வீடு

உள்ளது. நானும் எனது சகோதரரும் 2018 சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்ப்படுத்திக் கொண்டோம். சர்வே எண்.894/2-ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 91 சென்ட் ஆகும். இதில் எனது தம்பிக்கு சுமார் 45 சென்ட் கொடுத்துள்ளோம். அதை பிரித்து பட்டா மாற்றம் செய்து கொண்டோமா என்றால் ஒரே பட்டாவாக உள்ளது. அனுபவம் மட்டும் தனித்தனியாக உள்ளது. எனது தம்பிக்கு கொடுத்த சொத்தின் நான்கு எல்லை விவரம் தெரியுமா என்றால் தெற்கே எங்கள் இடம் உள்ளது. வடக்கே சுப்பிரமணி ரெட்டியார் இடமும் தெற்கே பாலாஜி நிலமும் மேற்கே ரோடு உள்ளது. அது அரவாக்கம் செல்லும் சாலையாகும். பிரதிவாதி கட்டிய வீடு அவர் சொந்தமாக கட்டிய வீடு ஆகும். வழக்கு சொத்திற்கு நான்கு எல்லை விவரம் தெரியாமல் முன்னுக்கு பின்னாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நான் கூறும் அளவில் இருந்து மாறுபடக்கூடியது என்றால் சரியல்ல. எந்த அளவும் மாறாது. வழக்கு சொத்தில் எனது தந்தை காலத்தில் இருந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல எனது தந்தை இறப்பிற்கு பிறகு இருந்து குடியிருந்து வருகிறார். இந்த வழக்கு குறித்து நான் கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**